25368

AL/2020/72/T-I(NEW)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.

(i) இச்செய்யுள் மூலம் விளங்கும் பாட்டுடைத் தலைவனது சிறப்புக்களைத் தெளிவுபடுத்துக.
(ii) இச்செய்யுளின் திணையையும் துறையையும் விளக்குக.
(iii) இச்செய்யுளில் அமைந்துள்ள அணியினையும் அது கையாளப்பட்ட நோக்கத்தினையும் விளக்குக.

(ஆ) கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ii) இச்செய்யுளில் யார், எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறான்?
(iii) இச்செய்யுளில் அமைந்துள்ள அணிகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**2.** (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) பாடுகின்றோர் எல்லோருங் கவிஞ ரல்லர்
பாட்டென்றால் பண்டிதர்க்கே உரிமை யல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெடுத்த ஒளியால் ஏங்கி
வாடுகின்ற மக்களினம் மாட்சிகொள்ள
மறுமலர்ச்சிப் பெருவாழ்வை வழங்கு மாற்றல்
கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி கொண்டு,
குமுறுகின்ற கோளரியே கவிஞ னாவான்.

பஞ்சணையில் வீற்றிருந்து பனுவல் பார்த்து,
பாடுகின்ற கவிதைகளும் பாராள் வேந்தர்க்
கஞ்சியவர் ஆணைவழி அடங்கி நின்றே
ஆக்குகின்ற கவிதைகளும் அழிந்துபோகும்
கஞ்சியின்றிக் கந்தைசுற்றி வாழ்வானேனுங்
கனல்வீசி எரிமலைதீ கக்கல் போல
விஞ்சுகின்ற சிந்தனையால் விழுங்கப்பட்டு
விருந்தளிக்கும் விறலோனே கவிஞனாவான்.

கற்கண்டே செழுந்தேனே கனியேயென்று
கலகலப்பாய்ச் சுவைப் பெயர்கள் கலந்துநல்ல
சொற்கொண்டு சொல்கின்ற கவிதையெல்லாம்
சொன்னவர்க்குத் தெரியாமல் தொலைந்துபோகும்
விற்கொண்டு விடும் வீரன் அம்புபோல
விசைகூடும் அறிவுப்போர் வீறுதாங்கி
தற்கொண்ட புலமைவெறிச் சொல்லாற் சான்றோர்
சாற்றுகின்ற கவிதையென்றுஞ் சாதலில்லை.

அம்மானை திருப்பள்ளி எழுச்சி கோவை
அந்தாதி கலம்பகங்கள் பார்த்துப் பார்த்து
விம்மாமற் பொருமாமற் கண்ணீர் விட்டு
விலைக்கு மாரடிக்கின்ற மெல்லியர் போல்
சும்மாவோர் உணர்வின்றிச் சொற்கள் சேர்த்து
சொன்மாலை தொடுக்கின்றோர் கவிஞரல்லர்
தன்மானத் துள்ளொளியால் உலகை ஓம்புந்
தனியாற்றல் தாங்கி நிற்போர் கவிஞராவர்

[பக். 3 ஐப் பார்க்க

பாட்டினுக்கோர் புலவனென்றே தமிழ் நாடெங்கும்
பாராட்டும் பாரதியின் கவிதை யாற்றல்
நாட்டிற்காம் விடுதலைப்போர் வெறியை ஊட்டி
நற்றமிழ்க்கும் மறுமலர்ச்சி நல்கக் கண்டோம்
வீட்டிற்குள் வீற்றிருந்தே கொள்கை யின்றி
விண்ணப்பப் பதிகங்கள் விளம்புவோரை
ஏட்டிற்குள் கவிஞரென எழுதினாலும்
இறவாத கவிஞரையே உலகம் ஏற்கும்.

(i) எத்தகையவர்கள் இறவாத கவிஞர்கள் என்று இக்கவிதையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளனர்?

(ii) யார் யார் கவிஞர்கள் அல்லரென ஆசிரியர் கருதுகின்றார்?

(iii) இக்கவிதையில், பாரதியார் முன்னுதாரணமாகக் கொள்ளப்பட்டுள்ளதற்கான காரணம் யாது?

(iv) இக்கவிதையில் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**அல்லது**

(ஆ) கோவில் வீதியின் மத்தியில் குடை விரித்து நின்றது கூத்துக் களரி. பழைய காலம் போல், 'களரி'யைச் சுற்றி வாழைக் குற்றியில் பந்தம் எரியவில்லை. 'டியூப் பல்ப்'புகள்தாம் 'எரிந்து' கொண்டிருந்தன. 'களரி'யைச் சுற்றி மணல் தெரியாத அளவுக்கு ரசிக கோடிகள், குழுமியிருந்தனர்.

'களரி' 'உறங்காமல்' இருப்பதற்காக 'மத்தாளம்' கம்பீரமாகப் 'பேசி'யது அண்ணாவியாரும், அவரது கோஷ்டியினரும் எப்போதோ அரங்கேறிய 'கட்டுப்பெட்டி' நாடகத்திலிருந்து நல்ல துள்ளல் மெட்டில் சில பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஈடுகொடுக்க முடியுமா இந்த 'மெட்டு'க்கு?

கூத்து ஆரம்பமாகின்றது.

'கட்டியகாரன்' களரிக்குள் குதிக்கிறான். வெள்ளைச் சால்வையைத் திரையாக விரித்து, கட்டியக்காரனை மறைத்துப் பிடிக்கின்றனர் இருவர். பகல் வெற்றி கொழுத்தப்படுகின்றது. களரிக்கு வெளியில் சீன வெடி 'படபட'வென்று முழங்குகின்றது. அண்ணாவியார் அற்புதமானதொரு 'தாளக்கட்டு' வைக்கின்றார். மத்தளம் முழங்க சல்லாரி ஒலிக்க காலில் கட்டிய 'சலங்கை' 'கலீர் கலீர்' என்று குலுங்க கட்டியக்காரன் என்ற 'பபூன்' கூத்தாடுகின்றான். அண்ணாவியார் ஆட்டுவிக்க அவன் ஆடுகின்ற ஆட்டம் 'களரி'யில் கலகலப்பை ஏற்படுத்துகின்றது.

'தாளக்கட்டு' அமர்களம் ஓய்கின்றது. மறைத்திருந்த சால்வைத் திரை அகற்றப்படுகின்றது.

'கட்டியக்காரன் வந்தான் கைதனில் பிரம்பும் கொண்டு...' என்று மேல் உச்சஸ்தாயியில் 'தம்' பிடித்துப் பாடிக்கொண்டு 'களரி'யில் தாளம் பிசகாமல் ஆடி வருகின்றான் கட்டியகாரன்.

அவனுடைய உறவினர்களும், நண்பர்களும் களரிக்குள் புகுந்து கழுத்தில் கடதாசி மாலைகளையும் தோளில் சால்வைகளையும் 'பரிசாக'ப் போட்டு மகிழ்கின்றனர். சிலர் அவனுடைய இடுப்பிலும் சால்வையைக் கட்டி விடுகின்றனர். கொஞ்சம் நெருங்கிய நண்பர்கள் பிளாக்ஸு'க்குள்ளிருந்து கொஞ்சம் 'அம்பாரை'யை ஊற்றிக் கொடுத்து கூத்துக்கலைஞர்களை உஷார்ப்படுத்தவும் தவறவில்லை!

(i) கூத்தைப் பார்க்க வந்திருந்த ரசிகர்களின் மிகுதிப்பாட்டை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

(ii) அண்ணாவியாரும் அவரது கோஷ்டியினரும் பாடிய பாட்டுக்களின் தரச்சிறப்பினை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர் கையாண்ட உத்தி யாது?

(iii) காலமாற்றம் பற்றிய ஆசிரியரின் அவதானம் இந்த உரைப்பகுதியில் எவ்வாறு வெளிப்படுகிறது?

(iv) கூத்துக் கலைஞரின் ஆதரவாளர்கள், கலைஞர்களை உற்சாகப்படுத்துவதற்காகச் செய்தவற்றுள், ஆசிரியர் வெளிப்படையாகக் கூறாது நாசூக்காகக் கூற முற்படும் விடயம் யாது? அதை எவ்வாறு நாசூக்காகக் கூறுகிறார்?

($4 \times 4 = 16$ புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

## பகுதி II

**3.** திருக்குறள் **பெரியாரைத் துணைக்கோடல்** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதும்
(ஆ) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு
(இ) பெரியாரைத் துணைக்கோடலின் பயன்
(ஈ) பெரியாரைத் துணையாகக் கொள்ளாதவிடத்து ஏற்படும் குற்றம்
(உ) கையாளப்பட்டுள்ள உவமையின் சிறப்பு

(20 புள்ளிகள்)

**4.** **கம்பராமாயணம் குகப்படலத்தில்,**

(அ) பரதன் பெரும்படையோடு வருவது கண்டு சினந்த குகனது நிலை
(ஆ) அவனது பெருமிதம்
(இ) பரதன் பற்றி அவன் கொண்ட தப்பபிப்பிராயம்
(ஈ) இராமன் மீது அவன் கொண்ட பேரன்பு

என்பன வெளிப்படுமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

**5.** சுவாமி விபுலாநந்தரின், **தமிழ்த்தொண்டு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தமிழின் அன்றைய நிலையும் இன்றைய நிலையும்
(ஆ) உத்தம கவிகளின் ஆற்றல்
(இ) ஏனைய தேசத்தாருடன் ஒத்த பான்மையினராய் சிறப்புறவேண்டி மேற்கொள்ளப்பட வேண்டியவை
(ஈ) சுப்பிரமணிய பாரதியாரிடம் விபுலாநந்தர் கண்ட சிறப்பு

(20 புள்ளிகள்)

**6.** எஸ்.பொ.வின் **தேர்** சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு

(அ) பார்வதிப்பிள்ளையை முகத்தார் நினைவுகூரும் சந்தர்ப்பங்கள்
(ஆ) சுப்பிரமணியத்தின் குடும்பம் குறித்த அவரின் இதமான நினைவுகள்
(இ) குமாரசாமி குறித்த அவரின் பெருமிதம்
(ஈ) ஆசிரியரின் மொழிநடை

என்பன பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

**7.** **இரு துயரங்கள்** நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) டொக்டர் கந்தப்புவின் துயரத்துக்கான காரணம் யாது? மனோகரன்மீது அவருடைய வெறுப்பு வளர்ந்தவாற்றை விளக்குக.
(ஆ) மனோகரனுடைய துயரத்துக்கான காரணம் யாது? கந்தப்புவின்மீது அவனுடைய சினம் வளர்ந்தவாற்றை விளக்குக.
(இ) டொக்டருடைய வெறுப்பும் சினமும் அவ்வளவு நியாயமானவை அல்ல என்று கூறுவது எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதை விளக்குக.
(ஈ) நாடகத்தின் கட்டமைப்பும் அதில் கையாளப்பட்டுள்ள மொழிநடையும் பற்றிக் கருத்துரைக்குக?

(20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **மணிமேகலை** பாடப் பகுதியில் மாலைக்காட்சியும் நிகழ்ச்சிகளும் விவரிக்கப்படுமாறு
(ஆ) **அமலனாதிபிரான்** பதிகத்தில் திருவரங்கனின் அவதாரச் செய்திகளும் பெருமையும் விளக்கப்படுமாறு
(இ) **தேம்பாவணி** காட்சிப் படலத்தில் மரியாளின் மேன்மை உணர்த்தப்படுமாறு
(ஈ) **காரணமாலையில்** முஹம்மது நபி(ஸல்) அவர்களதும் அவரது பெற்றோரினதும் பெருமைகள் கூறப்படுமாறு
(உ) **ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** நாவலில் தலைமையாசிரியர் சின்னத்தம்பியின் சமுதாயப் பிரக்ஞை வெளிப்படுத்தப்படுமாறு

(20 புள்ளிகள்)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் அரை உயிர்
(1) அ (2) ஐ (3) வ் (4) ம் (5) ன் (......)

1.2 பின்வருவனவற்றுள் ஈரிதழ் மூக்கொலி
(1) ப் (2) உ (3) ஞ் (4) ம் (5) ண் (......)

1.3 வேற்றுநிலையாக மட்டும் மயங்கும் எழுத்து
(1) க் (2) ட் (3) ச் (4) ர் (5) ள் (......)

1.4 குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல்
(1) பசுக்கூட்டம் (2) பேசுபொருள் (3) நெஞ்சுக்குள்
(4) விருந்துபசாரம் (5) விட்டுக்கொடு (......)

1.5 இயல்புப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) மக்களால் (2) என்னால் (3) கத்தியால்
(4) மிருகத்தால் (5) உழைப்பால் (......)

1.6 'இன்' என்னும் இறந்தகால இடைநிலை இடம்பெறும் சொல்
(1) ஓடியது (2) போனான் (3) பாடினான்
(4) சென்றான் (5) கண்டான் (......)

[பக். 2 ஐப் பார்க்க

1.7 ஒன்றுக்கு மேற்பட்ட துணைவினைகளைக் கொண்டமைந்த சொல்
(1) கோபித்துக்கொண்டான்
(2) கேட்டுப்பார்த்தேன்
(3) எதிர்பார்த்திருந்தேன்
(4) தூங்கிக்கொண்டிருந்தேன்
(5) மூடிவிட்டான்
(......)

1.8 சாரியை **பெறாது** புணர்ந்த சொல்
(1) வீட்டினை (2) வீட்டினது (3) வீட்டினில் (4) வீட்டினால் (5) வீட்டிலிருந்து (......)

1.9 'ஒழுங்காகக் கற்பதன் பயனை வருங்காலத்தில் உணர்ந்து கொள்வோம்' இங்கு **கற்பது** என்பது
(1) வினையாலணையும் பெயர்
(2) வினையெச்சம்
(3) காலம் காட்டும் தொழிற்பெயர்
(4) பெயரடை
(5) அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்று
(......)

1.10 உடைமைப்பொருள் உணர்த்தும் படர்க்கைப் பெயர்
(1) தாம் (2) தன் (3) தமக்கு (4) தன்னால் (5) தம்மிடம் (......)

1.11 வினையாலணையும் பெயர் இடம்பெற்ற வாக்கியம்
(1) அந்த வேளையில் வந்தது பெரும் உதவியாய் அமைந்தது.
(2) வளவுக்குள் கட்டாக்காலிகளாக வந்தவற்றைத் துரத்திவிட்டேன்.
(3) இன்று முழுவதும் மழை வருவதும் போவதுமாய் உள்ளது.
(4) ஊருக்குள் புகுந்த யானைகள் பயிர்களை நாசம் செய்தன.
(5) அவர் வருவார் வருவார் என்று வாசலில் காத்திருந்தேன்.
(......)

1.12 பெயரடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்
(1) ஆட்சி (2) உயர்ச்சி (3) மகிழ்ச்சி (4) பேய்ச்சி (5) காட்சி (......)

1.13 கால இடைநிலை இன்றி, காலம் உணர்த்தும் வினைமுற்று
(1) வந்தது (2) போனது (3) படிக்கிறான் (4) படிப்பான் (5) போகும் (......)

1.14 தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையக்கூடியது
(1) பிடி (2) முடி (3) குடி (4) அடி (5) நடி (......)

1.15 'பசித்தவர்களுக்கு உணவு கொடுத்ததால் வந்த திருப்தி' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமைகள், முறையே
(1) செயப்படுபொருள், கொடை, கருவி
(2) கொடை, காரணம்
(3) எழுவாய், கொடை, அடைதல்
(4) கொடை, செயப்படுபொருள், காரணம்
(5) கொடை, செயப்படுபொருள்
(......)

1.16 'தொலைந்துபோன ஆடு எங்கே போய்ச்சேர்ந்திருக்கும் என்ற சிந்தனை அவனது மூளையைக் குடைந்து கொண்டிருந்தது.'
மேற்படி வாக்கியத்தின் எழுவாய்த் தொடர்
(1) அவன்
(2) தொலைந்து போன ஆடு
(3) ஆடு
(4) அவனது மூளை
(5) தொலைந்துபோன ஆடு எங்கேபோய்ச் சேர்ந்திருக்கும் என்ற சிந்தனை (......)



0030736

1.17 செயப்படுபொருள் **குன்றாத** வாக்கியம்
(1) பரீட்சை நெருங்குவதால் அவள் கவனமாகப் படிக்கிறாள்
(2) அவன் ஓட்டமும் நடையுமாகப் பாடசாலைக்குச் சென்றான்.
(3) அவன் பஸ்ஸை எதிர்பார்த்தபடி நெடுநேரமாக நின்றான்.
(4) அவள் தனது எதிர்காலம் குறித்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.
(5) அவன் தன் இலட்சியத்தை அடையும் நோக்கில் தொடர்ந்து முயல்கிறான். (……)

1.18 'மாட்டு' என்ற இடைநிலையைக் கொண்டு எதிர்மறையாக மாற்றத்தக்க வினைமுற்றைக் கொண்ட வாக்கியம்
(1) நாளைக்குக் கட்டாயம் வரவேண்டும்.
(2) எப்போதும் அவன் எனக்கு நல்ல நண்பனாக இருப்பான்.
(3) நான் இப்போதுதான் வந்துகொண்டிருக்கிறேன்.
(4) அவர்கள் படிப்பில் மிகுந்த அக்கறை உள்ளவர்கள்.
(5) சென்ற வாரம் நான் ஊருக்குச் சென்றேன். (……)

1.19 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்ச வடிவத்தால் இணைக்கக்கூடிய முற்று வாக்கியங்களின் தொகுதி
(1) அவன் ஊருக்குச் சென்றான்;
அவன் தன் பெற்றோரைப் பார்த்து வந்தான்.
(2) அவன் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை;
அவன் ஒழுங்காகப் படிப்பதில்லை.
(3) இந்த உணவு மிகவும் சுவையானது;
இந்த உணவை நான் விரும்பி உண்பேன்.
(4) நான் கட்டுரை ஒன்றை எழுதினேன்;
அவன் அந்தக் கட்டுரையைத் தட்டச்சுச்செய்து தந்தான்.
(5) அவனது வருமானம் குடும்பச் செலவுக்கே போதாது;
அவன் தன் பிள்ளைகளை நன்கு படிக்கவைக்கிறான். (……)

1.20 மரபுத்தொடர் அமையப்பெற்ற வாக்கியம்
(1) பெரிய மீன் வரும் என்ற எதிர்பார்ப்போடு கொக்கு ஒற்றைக்காலில் நிற்கிறது
(2) விபத்தில் ஒரு காலை இழந்தாலும் ஒற்றைக்காலோடு பாடுபட்டு உழைக்கிறான்.
(3) தான் கேட்டதைப் பெற்றோர் வாங்கித்தர வேண்டும் என்று அவன் ஒற்றைக்காலில் நிற்கிறான்.
(4) சுவரில் ஒரு காலை ஊன்றியபடி ஒற்றைக்காலில் நிற்கிறான்.
(5) சக்தி மிக்க ஆயுதத்தைப் பெறுவதற்காக அருச்சுனன் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தான். (……)

(20 புள்ளிகள்)

* *

[பக். 4 ஐப் பார்க்க

0030735

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் உள்ள **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,
* பகுதி **II** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

நாவல் ஒரு கலை. இலக்கியக் கலையில் அது ஒரு வகை. கலையைப் பொழுதுபோக்காக நாடுவது மனிதர் இயல்பு. ஆகவே, நாவலும் பொழுதுபோக்குக்காக மனிதராலே நுகரப்படுகின்றது.

பொழுதை எப்படிப் போக்குவது என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. சிலர் தோட்ட வேலையில் பொழுது போக்கலாம்; சிலர் சீட்டாட்டத்தில் பொழுது போக்கலாம்; சிலர் தனியே இருந்து பாடுவதில் பொழுது போக்கலாம்; அவரவர்களின் மனப்பாங்கிற்கு ஏற்ப பொழுதைப் போக்க விரும்புகிறார்கள்.

இவ்வாறே, நாவலை வாசித்துப் பொழுது போக்குவதிலும் பலவகை உண்டு. சிறந்த நோக்கங்களுடன் - உயர் கருப்பொருள்களைக் காட்டும் - உயர்ந்த மக்களைப் படைத்துக் காட்டும் நாவலில் சிலரது மனம் செல்லும்; நடைபெறும் நிகழ்ச்சிகளை அப்படியே படைத்துக் காட்டும் நாவல்களில் சிலரது மனம் செல்லும்; கொலையும் கொள்ளையும் மலிந்த துப்பறியும் நாவல்களிற் சிலரது மனம் ஈடுபடும்; காதல் இரகசியங்களையும் காம லீலைகளையும் வருணிக்கும் நாவல்களில் சிலர் விரும்பி மூழ்குவார்கள். ஆகவே, நாவலில் பொழுது போக்குவது என்றாலும் அவரவர்களின் மனப்பாங்கிற்கு தக்கபடியே, தமக்கு விருப்பமான நாவலில் ஈடுபடுவார்கள். யார் யாருடைய சுவை எப்படி எப்படி அமைகின்றதோ, அதற்கேற்றபடி - அச்சுவை தரும் - நாவலில் அவர்கள் மூழ்குவார்கள். சிலர் விரும்புவதை வேறு சிலர் வெறுப்பார்கள். சிலர் ஆர்வத்துடன் படிப்பதை வேறுசிலர் தொடவும் முன்வரமாட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரை, நடைக்காகவோ, வருணனைக்காகவோ, திடுக்கிடும் திருப்பங்களுக்காகவோ நாவலைப் படிப்பதில் அர்த்தமில்லை. நல்ல பாத்திரங்களை படைத்துக் காட்டும் நாவல்களையும் வாழ்க்கை அனுபவங்களை உயர்ந்த நோக்குடன் எடுத்து விளக்கும் நாவல்களையும் விரும்பிப் படிப்பது பயனானதாகும். உண்மையில் பயனுள்ள வகையில் நல்ல வகையில் பொழுதுபோக்க விரும்புபவர்களுடைய தெரிவு அதுவாகத்தான் இருக்க முடியும். நன்மை, தீமைகளை ஆராயாமல் மனம்போன போக்கில், பயனைப் பற்றிக் கவலைப்படாமல் பொழுதுபோக்குபவர்களுக்கு இந்நாவல்கள்தாம் அவசியமென்றில்லை.

(13 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முந்திய கட்டுரையிலே பாரதியார் கவிதைத் தொகுதிகளிற் காணப்படும் பிரதிபேதங்களின் தன்மையைப் பற்றி சில உதாரண விளக்கங்கள் கூறினேன். பொதுவிற் பாட பேதங்களை இருவகைப் படுத்தலாம். தற்செயற்பிழை, குறிக்கோட்பிழை ஆகிய இருவகைப் பாடபேதங்களும் பல்வேறு ஏதுக்களால் தோன்றுகின்றன. இவற்றைச் சுருக்கமாய்க் கூறுவதாயின், தற்செயற்பிழை பெரும்பாலும் காட்சி காரணமாகத் தோன்றும் மயக்கமாகும். எழுத்துப் பிழை முதலியன இப்பிரிவில் அடங்கும். முற்காலத்தில் ஏடெழுதுவோராலும், இக்காலத்திற் பிரதிசெய்வோராலும், அச்சுக் கோர்ப்போராலும் இத்தகைய தவறுகள் ஏற்படுகின்றன. குறிக்கோட்பிழை என்பது சற்றுச் சிக்கலானது - மூல ஆசிரியர் இவ்வாறுதான் எழுதியிருப்பார் என்று பின் வந்தோர் கருதிச் செய்யும் மாற்றங்களே - பிரக்ஞை பூர்வமாகச் செய்யும் 'திருத்தங்களே' - குறிக்கோட்பிழை அடிப்படையில் மொழியியற் சார்புடையது; இலக்கண சம்பந்தமுடையது. எனினும் பண்பாடு, அழகியல், ரசனை முதலியவற்றின் அடிப்படையிலும் இத்தகைய பிழைகள் தோன்றுவதுண்டு.

[பக். 5 ஐப் பார்க்க

உதாரணமாக, ரசிகமணி டி.கே.சி.பழந்தமிழ்ப் பாடல்கள் சிலவற்றையும் கம்பன் பாடல்களையும் தனது சொந்த ரசனையின் அடிப்படையிலும் 'கம்பனது கவித்துவம்' என்னும் அகநிலைப்பட்ட அளவுகோலின் பேரிலும், மனம் போன போக்கில் மாற்றம் செய்தபோது ஏற்பட்ட பிரதிபேதங்கள் குறிக்கோட்பிழைகள் ஆகும்.

மேற்கூறிய இருவகைப் பிழைகளும் பாடங்கள் படியெடுக்கப்படும் பொழுது (அல்லது மீண்டும் மீண்டும் பதிப்பிக்கப்படும் பொழுது) பல்வேறு வழிகளில் எழுகின்றன. இவை ஒருவிதத்தில் தவிர்க்க இயலாதவை என்றும் கூறலாம். ஆனால் இவ்விரண்டிலும் குறிக்கோட்பிழை இலகுவிற் கண்டறிய இயலாததாகும்.

(i) பிரதிபேதம் அல்லது பாடபேதம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(ii) தற்செயற்பிழைகள் என்றால் என்ன? அவை எவ்வாறு ஏற்படுகின்றன?

(iii) குறிக்கோட்பிழை என்று ஆசிரியர் எதனைக் கருதுகிறார்?

(iv) தற்செயற்பிழை, குறிக்கோட்பிழை இரண்டிலும் சிக்கலானதாக ஆசிரியர் எதைக் கருதுகிறார்? ஏன்?

(v) இருவகைப் பிழைகளும் தவிர்க்க முடியாதவை என்று கருதுவதற்குக் காரணம் யாது?

(vi) கம்பன் பாடல்களில் ரசிகமணி டி.கே.சி. செய்த மாற்றங்கள் பற்றி ஆசிரியர் கூறுவதைத் தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)
(13 + 12= 25 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பினைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) வகுப்பறைக் கற்றலும் இணையவழிக் கற்றலும்

(ஆ) இயற்கையும் மனித வாழ்வும்

(இ) உலகமயமாதலும் பண்பாட்டுத் தனித்துவமும்

(ஈ) தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் பங்களிப்பு

(உ) 'நோய்க்கு இடங்கொடேல்'

(25 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (அ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களை அவற்றின் பொருள் அடிப்படையில் வகைப்படுத்துக.

(ஆ) யாப்பு, அடியெண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் சங்க அகப்பாடல்கள் நூல்களாகத் தொகுக்கப்பட்டவாற்றினை விளக்குக.

(இ) தொகை நூல்களில் கலித்தொகையின் தனித்துவம் பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

**5.** ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில்

(அ) இந்து

(ஆ) இஸ்லாமிய

(இ) கிறிஸ்தவ

சமயங்கள் சார்பாக எழுந்த செய்யுள் இலக்கியங்கள் பற்றிக் கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்று** நூல்களைத் தெரிவுசெய்து அவை ஈழத்து இலக்கிய வரலாற்றில் பெறும் இடத்தை மதிப்பிடுக.

(அ) இரகுவம்மிசம்

(ஆ) தத்தைவிடுதூது

(இ) கோட்டுப் புராணம்

(ஈ) கதிரைமலைப் பள்ளு

(உ) கனகி புராணம்

(15 புள்ளிகள்)

**7.** (அ) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், ஈழத்தில் தமிழ் உரைநடை வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பாக அமைந்தவற்றை விளக்குக.

(ஆ) உரைநடை விருத்திக்கு, ஆறுமுகநாவலர் ஆற்றிய பங்களிப்பைத் தெளிவுபடுத்துக.

(இ) தொடக்ககால ஈழத்து நாவல்கள் குறித்துக் கருத்துரை வழங்குக.

(15 புள்ளிகள்)

**8.** (அ) (i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக்காட்டி, பொருள் மயக்கம் அற்ற முறையில் திருத்தி எழுதுக.

திருகோணமலையில் கமஞ் செய்யும் இளைஞர்களை ஊக்குவிக்கும் மத்திய நிலையம் அமையுமென விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

(ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் அவ்வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

சமூகத் தலைமைகள் பொறுப்பற்ற வகையிலும் சுயநலநோக்கிலும் செயற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

(iii) "நான் வீட்டுக்குச் செல்லும் வழியில் ஆசிரியர் நடந்துவரக் கண்டு, அவரை சைக்கிளில் ஏற்றிச் சென்றேன்" என்று குமரன் கூறினான்.

- இத் தன்கூற்று வாக்கியத்தை, பிறர்கூற்று வாக்கியமாக்குக.

(iv) 'நனை' என்ற சொல் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் செயப்படுபொருள் குன்றா வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் அமைக்குக.

(v) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் அமைந்துள்ள சொற்களில் இடம்பெற்றுள்ள எழுத்துப்பிழைகளைத் திருத்தி, பிழையற்ற வகையில் எழுதுக.

- நாளுக்கு நாள் **செலவீனம்** அதிகரித்துச் செல்கின்றது
- சமூகத்துக்குத் தொண்டாற்றிய பெரியோர்களை ஆண்டுக்கு ஒரு முறையேனும் **நினைவு கூறுதல்** வேண்டும்.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றினைப் பற்றி** சிறுகுறிப்பு வரைக.

(i) எச்சவினை

(ii) கூட்டுவினை

(iii) பெயரடை

(05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

* * *

WWW.PastPapers.WIKI
Sri Lanka Biggest past papers Bank
0030735